பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**19 02 2026** **THURSDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆற்றிய உரை ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று குடியரசுத் துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
2. சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் மரக்கன்றுகளை நட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் வலியுறுத்தியுள்ளார்.
3. பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நோய் பரவுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு ஜூவல் ஓரம் தெரிவித்துள்ளார்.
4. இந்தியா — இஸ்ரேல் இடையே பாதுகாப்புத்துறையில் உறவுகளை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது.
5. தில்லி சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Siddhant Banthia** — பல்கேரியாவின் **Alexander Donski** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள்

<<<<<<>>>>>>

இந்தியா செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆற்றிய உரை ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று குடியரசுத் துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்த இந்தியாவின் தொலைநோக்கு பார்வையை இது பிரதிபலிப்பதாக கூறியுள்ளார்.

தொழில்நுட்ப வளர்ச்சியில் மனிதர்களின் பங்களிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், பிரதமரின் உரை இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியாவின் வளர்ச்சி உலக அளவில் முக்கியமானது என்று அவர் கூறியுள்ளார்.

உலகளாவிய பொருளாதார வளர்ச்சிக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பங்கு இன்றியமையாதது என்று திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டையொட்டி, பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்றும் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

அபுதாபி பட்டத்து இளவரசர் ஷேக் காலித் பின் ஜயீத்தை சந்தித்து பேசிய பிரதமர், இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்தும், தற்போதுள்ள கூட்டு முயற்சிகளில் ஏற்பட்டுவரும் முன்னேற்றம் குறித்தும் விரிவாக விவாதித்தார்.

இந்தியா — ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையேயான ஒட்டுமொத்த ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்தும் அவர்கள் ஆய்வு செய்தனர்.

அரசியல், வர்த்தகம், கலாச்சார உறவுகள் குறித்தும் இருநாட்டு மக்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்தும் ஆய்வு செய்தனர்.

பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, கல்வி, கலாச்சாரம் ஆகிய துறைகளில் கூட்டு முயற்சிகளுக்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

நெதர்லாந்து பிரதமர் **Dick Schoof**-வை சந்தித்து பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, செயற்கை நுண்ணறிவு

தொழில்நுட்பத்துடன் கூடிய சமூக பொருளாதார மாற்றம் குறித்து விவாதித்தனர்.

இந்தியா — ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்த்தை விரைவில் நடைமுறைப்படுத்துவது குறித்தும் அவர்கள் ஆய்வுகள் செய்தனர்.

புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகள் ஆகியவை குறித்தும் நெதர்லாந்து பிரதமருடன், திரு நரேந்திர மோடி பேச்சு நடத்தினார்.

சுவிட்சர்லாந்து அதிபர் திரு **Guy Parmelin-**னுடன் இருதரப்பு பேச்சுக்கள் நடத்திய திரு நரேந்திர மோடி, அந்நாட்டுடன் பொருளாதார வர்த்தக முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும், தொழில்நுட்ப ஒத்துழைப்பு குறித்தும் பேச்சு நடத்தினார்.

இருநாடுகளுக்கும் இடையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் மூலம், ஆக்கப்பூர்வமான முதலீடுகளை செய்ய முடியும் என்றும், புதிய வேலைவாய்ப்புகளை இளைஞர்களுக்கு உருவாக்கித் தர முடியும் என்றும் இரு தலைவர்களும் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

கடல்சார் சவால்களை எதிர்கொள்வதற்கு உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் விசாகப்பட்டினத்தில், மிலன் 2026 கடற்படை பயிற்சியை தொடங்கிவைத்து பேசிய அவர், சிக்கலான மற்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய கடல்சார் சவால்களை தீர்க்க இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

சர்வதேச கடல் போக்குவரத்து மற்றும் வர்த்தகம் முன்எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக கூறிய அவர், கடல்சார் பொருளாதார வளர்ச்சிக்கு இது உத்வேகம் அளிக்கும் என்றும் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் அமைதியை பராமரிப்பதில் கடற்படையின் பங்கு முக்கியமானது என்றும் அவர் கூறினார்.

ஆழ்கடல் பகுதியில் உள்ள கனிம வளங்களை பயன்படுத்துவதற்கான முயற்சியை அரசு எடுத்து வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் மரக்கன்றுகளை நட வேண்டும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மரக்கன்று நடும் விழாவில் உரையாற்றிய அவர், மரக்கன்றுகள் நடுவது தொடர்பாக, விழிப்புணர்வு ஏற்படுத்த இயக்கம் மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதற்காக, மக்களுக்கு மரக்கன்றுகளை வழங்குவதற்கான மையங்களை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

மரக்கன்றுகளை நட்டு அதனை பராமரித்து சுற்றுச்சூழலை பாதுகாக்க மக்களிடையே விழிப்புணர்வு தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

மரக்கன்றுகள் நடுவது தொடர்பான விழிப்புணர்வு இயக்கம் கடந்த 2021-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-ஆம் தேதி தொடங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நர்மதா ஜெயந்தியையொட்டி மேற்கொள்ளப்பட்ட உறுதிமொழியில் ஒவ்வொரு நாளும் ஒரு மரக்கன்றாவது நட முடிவெடுக்கப்பட்டுள்ளதாக திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மூன்று நாள் பயணமாக இன்று அஸ்ஸாம் செல்கிறார்.

**Silchar-** செல்லும் அவர், நாளை எல்லை பாதுகாப்புப் படையின் **Natunpur** எல்லைப்பகுதியில் உள்ள பங்களாதேஷ் எல்லைப்பகுதியில் பாதுகாப்பு தயார் நிலை குறித்து ஆய்வு செய்கிறார்.

அப்பகுதியில் செயல்திறன் மிக்க கிராமங்களை உருவாக்கும் திட்டத்தை அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

**Barak** பள்ளத்தாக்கில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்ற உள்ளார்.

நாளை மாலை அஸ்ஸாமிலிருந்து திரிபுரா மாநில தலைநகர் அகர்தலா திரு அமித் ஷா செல்ல உள்ளார்.

<<<<<<>>>>>>

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நோய் பரவுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு ஜூவல் ஓரம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தேசிய பழங்குடியினர் நல ஆணையத்தின் 23-ஆவது நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், பழங்குடியினரின் உரிமைகளுக்காக இந்த ஆணையம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

பழங்குடியினரின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறிய அவர், இந்த ஆணையத்துக்கு அனைத்து ஆதரவும் மத்திய அரசு அளித்து வருவதாக தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய இணையமைச்சர் திரு துர்கா தாஸ், தேசிய பழங்குடியினர் நல ஆணையர் திரு அந்தார் சிங் ஆரியா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மத்தியப்பிரதேசத்தின் உஜ்ஜேன் மாவட்டம் Rupeta-வில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பல்வேறு திட்டப்பணிகளை இன்று தொடங்கிவைத்தார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், இந்நிகழ்ச்சியில் கர்நாடக ஆளுநர் திரு தாவர் சந்த் கெலாட் உள்ளிட்டோர் கலந்துகொண்டதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

ஏரோ நாட்டிக்ஸ் மற்றும் பாதுகாப்பு திறன் மேம்பாட்டுக்கான தேசிய பயிற்சிக்கல்லூரி கான்பூரில் தொடங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

பிரான்ஸ் நாட்டின் கூட்டு முயற்சியில் இந்த பயிற்சிக் கல்லூரி அமைக்கப்படுகிறது.

பிரதமரின் திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புத் திறனுக்கான திட்டத்தின்கீழ், இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களோடு இணைந்த பயிற்சியை கான்பூர் நிறுவனத்தின் மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி இதற்கான அறிவிப்பை அந்நாட்டு அதிபருடன் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இன்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி,

கான்பூர் ஏரோ நாட்டிக்ஸ் மற்றும் பாதுகாப்பு பயிற்சி கல்லூரியின் மூலம் புதிய விமான தொழில்நுட்ப வல்லுநர்களை உலகத்தரத்தில் உருவாக்க முடியும் என்று தெரிவித்தார்.

அதுமட்டுமின்றி, பிரான்ஸுடன் இணைந்து, ஏரோ நாட்டிக்ஸ் துறையில் புதிய தொழில்நுட்பங்களை கொண்டுவருவதற்கான வாய்ப்பையும் இது ஏற்படுத்தும் என்றும் திரு ஜெயந்த் சௌத்ரி கூறினார்.

<<<<<<>>>>>>

நக்சலைட் பிரச்சினைகளில் இருந்து பிஹார் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

**Munger-**ல் இறுதியாக செயல்பட்டு வந்த நக்சலைட் ஒருவர் சரணடைந்ததையடுத்து அம்மாநில காவல்துறை இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இந்தியா — இஸ்ரேல் இடையே பாதுகாப்புத்துறையில் உறவுகளை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது.

பிரதமர் திரு நரேந்திர மோடி இம்மாத இறுதியில் இஸ்ரேல் பயணம் மேற்கொள்ள உள்ளதன் முன்னோடியாக இருநாட்டு ராணுவ அதிகாரிகள் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சகமும், இந்தியா பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் இஸ்ரேலின் டெல்அவிவில் இதுதொடர்பாக ஆலோசனை மேற்கொண்டபின் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்மூலம், இந்தியா — இஸ்ரேல் இடையே ராணுவ தளவாட உற்பத்தி தொழில் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்பட உள்ளன.

<<<<<<>>>>>>

பாகிஸ்தானின் கராச்சியில் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் 9 குழந்தைகள் உட்பட 16 பேர் உயிரிழந்தனர்.

கராச்சி சந்தை பகுதி அருகே உள்ள அடுக்குமாடி கட்டிடத்தில் ஏற்பட்ட இந்த விபத்தில் 16 பேர் காயமடைந்ததாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர.

எரிவாயு கசிந்து இந்த விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

<<<<<<>>>>>>

தில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Siddhant Banthia** — பல்கேரியாவின் **Alexander Donski** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **6-2, 6-3** என்ற செட் கணக்கில், பிலிப்பைன்சின் **Francies Casey -** ஜிம்பாப்வேயின் **John Lock** இணையை வென்றது.

இப்போட்டியில இந்தியாவின் திவிஜ் சரண் — கரண் சிங் இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------

பெங்களூருவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **2-6, 6-4, 7-6** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Mai Hontama-**வை வென்றார்.

---------------

சிங்கப்பூர் ஸ்மாஷ் டேபிள் டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மனுஷா, சத்யன் ஞானசேகரன், ஆகாஷ்பால், **Yashaswini Ghorpade** ஆகியோர் வெற்றிபெற்றனர்.

---------------

உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில், கனடா — ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்ற கனடா அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

**<<<<<<END>>>>>>**